# 16

# பிறர் தேவைக்கு முன்னுரிமை வழங்குவோம்

ஒரு நாள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் ஒருவர் வந்தார். அவர் தனது வறுமை பற்றி முறையிட்டார். அவருக்கு உணவு வழங்க தமது வீட்டில் எதுவும் இருக்கவில்லை என்பதால், அவருக்கு உணவளிக்குமாறு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஸஹாபாக்களிடம் கூறினார்கள். 'நான் அவருக்கு விருந்தளிக்கிறேன்' எனக் கூறி ஓர் அன்ஸாரித் தோழர் அவரை அழைத்துச் சென்றார். 'இவர் எமது விருந்தாளி, எவ்வித குறைபாடும் இல்லாமல் இவருக்கு உணவளிக்க வேண்டும்' என்று மனைவியிடம் கூறினார். 'குழந்தைகளுக்குத் தேவையான உணவு மாத்திரமே உள்ளது' என்று மனைவி கூறினார். அதனைக் கொண்டுவந்து விருந்தாளிக்கு வைக்குமாறும், இருவரும் உண்ண ஆரம்பித்ததும் விளக்கின் வெளிச்சத்தைக் கூட்டுவது போல காட்டி அதனை அணையச் செய்யுமாறும் மனைவிக்குக் கூறினார். அவ்வாறே, மனைவியும் செய்தார். விருந்தாளி வயிறு நிறைய உண்டார். இவ்வாறு தாம் பசியோடு இருந்து, விருந்தாளிக்கு உணவளித்தனர்.

மறுநாள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சமூகத்துக்கு அவர் சென்ற வேளை, அத்தோழரை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் விளித்து, 'உங்களிருவரினதும் விருந்தோம்பும் பண்பைக் குறித்து அல்லாஹ் மகிழ்ச்சியடைந்தான்' எனக் குறிப்பிட்டார்கள். அவ்வேளையில்தான் பின்வரும் திருவசனம் அருளப்பட்டது.

'தங்களுக்கு தேவையிருந்தும் தமது தேவையைவிட பிறர் தேவைக்கு முன்னுரிமை வழங்குகின்றனர்' *(59:9)*

நாம் எப்பொழுதும் எல்லா மக்களுடனும் இரக்கத்தோடு நடந்து கொள்ள வேண்டுமென இஸ்லாம் வலியுறுத்துகிறது. பிறர் மீது அன்பு

செலுத்த வேண்டும். இயலுமான உதவிகளைச் செய்ய வேண்டும். மற்றவர்களின் துன்பங்களை நீக்க முயற்சி செய்ய வேண்டும். அன்பு, உதவி தேடி ஏங்கி நிற்கும் அனைவரைப் பற்றியும் சிந்திக்க வேண்டும். நமது தேவைகளை விட மற்றவர்களின் தேவைகளுக்கு முடியுமான அளவு முக்கியத்துவம் அளிக்க வேண்டும், ஏனென்றால் 'மனிதர்களிடம் அன்பு செலுத்தாதவன் மீது அல்லாஹ் அன்பு செலுத்தமாட்டான்' (புகாரி) என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள்.

எமக்குத் தேவைகள் இருப்பது போலவே, மற்றவர்களுக்கும் தேவைகள் உள்ளன. ஒருவர் தனது தேவையை, தானே நிறைவேற்றிக் கொள்ள முடியாத போது, பிறரின் உதவியை எதிர்பார்ப்பார். அச்சந்தர்ப்பங்களில் நமது தேவைகளைச் சற்று பிற்படுத்தி, மற்றவர்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும். இதுதான் சிறந்த பண்பாகும். 'ஒரு முஃமினின் கஷ்டத்தை நீக்கி வைப்பவருக்கு, அல்லாஹ் மறுமை நாளில் அவரது கஷ்டத்தை நீக்குவான். கஷ்டப்படுபவனுக்கு உதவி செய்து இலகுவை ஏற்படுத்தினால், அவருக்கு இம்மையிலும் மறுமையிலும் அல்லாஹ் உதவி செய்து அவரது கஷ்டங்களை இலகுவாக்குவான்' (முஸ்லிம்) என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள்

நாம் அவசரமான தேவை ஒன்றுக்காக சென்று கொண்டிருக்கிறோம். அப்பொழுது கண் தெரியாத ஒருவர் பாதை தெரியாது தடுமாறிக் கொண்டிருக்கிறார். நாம் பேரூந்தில் இருக்கையில் அமர்ந்து பயணம் செய்கிறோம். வயோதிபர் ஒருவர் நின்று பயணிக்க முடியாமல் அவதிப்படுகிறார். நாம் வைத்தியசாலையில் மருத்துவரிடம் செல்ல வரிசையில் நிற்கிறோம். நமது முறை வரும் நேரம், ஒரு கடுமையான நோயாளி வருகிறார். இத்தகைய சந்தர்ப்பங்களில் நமது தேவைகளைச் சற்று பிற்படுத்தி, பிறரின் தேவைகளுக்கு முன்னுரிமை அளிப்பதே சிறந்த பண்பாகும்.

முஹாஜிரீன்கள், மக்காவிலிருந்து தமது வீடு வாசல்களைத் துறந்து மதீனாவுக்கு வந்தார்கள். அவர்கள் அனைத்தையும் இழந்து வந்த போது, மதீனத்து அன்ஸாரீன்கள் அவர்களைத் தமது சகோதரர்களாக ஏற்றுக் கொண்டார்கள். அன்ஸாரீன்கள் தேவைகள் இருந்த போதிலும், தம்மிடம் இருப்பதில் சரி பாதியை முஹாஜிரீன்களுக்கு வழங்க முன்வந்தார்கள். தமது தேவைகளை விட மற்றவர்களின் தேவைகளுக்கே முன்னுரிமை வழங்கினார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தம்மை விட

அதிக தேவையுடைய முஹாஜிரீன்களுக்கே தமக்குக் கிடைக்கும் நன்கொடைகளைக் கூட, வழங்குவார்கள். காரணம் பிறர் தேவைக்கு முன்னுரிமை வழங்குவது முஸ்லிமின் பண்பாகும்.

ஒரு அடியான் மற்றொரு அடியானுக்கு உதவி செய்து கொண்டிருக்கும் பொழுதெல்லாம், அவ்வடியானுக்கு அல்லாஹ் உதவிக் கொண்டே இருப் பதாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள். (முஸ்லிம்)

சில சந்தர்ப்பங்களில் சகோதரர்களுக்கிடையேயும் நண்பர்களுக்கிடையே யும் சிற்சில முரண்பாடுகள் ஏற்படுகின்றன. இதற்கு மற்றவர்களது தேவையை விடத் தமது தேவையை முற்படுத்தும் சுயநலமே காரணமாகும். மாறாக ஒவ்வொருவரும் மற்றவரின் தேவைக்கு முன்னுரிமை கொடுக்கப் பழகிக் கொண்டால், அனைவரின் வாழ்க்கையும் மகிழ்ச்சியாக அமைந்துவிடும்.

'உங்களில் ஒருவர் தான் விரும்புவதை தன் சகோதரனுக்கும் விரும்பாத வரை உண்மை விசுவாசியாக மாட்டார்'. (புகாரி, முஸ்லிம்) என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள்.

ஸஹபாக்கள் எப்பொழுதும் பிறர் தேவைக்கு முன்னுரிமை கொடுத்தே வந்துள்ளனர். இதற்கு ஆதாரமாகப் பின்வரும் சம்பவத்தை எடுத்துக் காட்டலாம்.

யர்மூக் போரின் பின், களத்தில் பலர் காயமுற்று குற்றுயிராய்க் கிடந்தனர். அவர்களுக்கு நீர் புகட்ட ஒருவர் நீரை எடுத்துச் சென்றார். ஒருவருக்கு நீர் புகட்ட முற்பட்டபோது மற்றொருவர் தண்ணீர் எனச் சத்தமிட்டார். குரல் கேட்டதும், அவர் இரண்டாம் நபருக்கு நீரை வழங்குமாறு சைகை காட்டினார். அவரிடம் நீர் கொண்டு செல்லப்பட்ட போது பிறிதொருவர் நீருக்காக குரல் எழுப்பினார். அப்பொழுது இரண்டாமவர் மூன்றாமவருக்கு நீரை வழங்குமாறு சைகை காட்டினார். மூன்றாமவரிடம் நீர் கொண்டு செல்லப்பட்ட போது அவர் மரணமடைந்துவிட்டார். இரண்டாமவரிடம் திரும்பி வந்த போது அவரும் மரணித்திருந்தார். உடனே முதலாமவரிடம் நீரைக்கொண்டு வந்த போது அவரும் நீரை அருந்து முன்பே மரணித்துவிட்டார்.

இங்கு தமது உயிர் பிரியும் நேரத்திலும் கூடத் தம்மைவிட மற்றவருக்கு முதன்மை வழங்கியுள்ள பெருந்தன்மையைக் காண்கிறோம்.

எனவே நாம் நம்மைப் பற்றி மாத்திரம் சிந்திக்காமல், மற்றவர்களின்

தேவையின் பக்கமும் கவனம் செலுத்த வேண்டும். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தமது தேவைகளைவிட, பிறர் தேவைகளுக்கு முன்னுரிமை வழங்கியுள்ளார்கள். அவ்வாறே செயற்படுமாறும் உபதேசித்துள்ளார்கள். எனவே எம்மால் முடிந்தளவு பிறருக்கு விட்டுக் கொடுத்து, அவர்களின் தேவைகளுக்கு முன்னுரிமை வழங்கி செயல்படுவோம்.

**பயிற்சி**

*(அ) அடைப்புக்குறிக்குள் இருக்கும் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.*

*1. பிறரின் தேவைகளை (அல்லாஹ்வுக்காக, மனசாட்சிக்காக, மனிதருக்காக) முதன்மைப் படுத்த வேண்டும்.*

*2. மனிதர்களிடம் அன்பு செலுத்துபவர்கள் மீது (மலக்குகள், நபிமார்கள், அல்லாஹ்) அன்பு செலுத்துவான்.*

*3. தமது தேவைகளை விட முஹாஜிரீன்களுடைய தேவைகளுக்கு முன்னுரிமை வழங்கியோர், (ஸஹாபாக்கள், அன்ஸாரீன்கள், குறைஷியர்கள்)*

*4. எமக்கிடையே சண்டை ஏற்படுவதற்கான முக்கிய காரணங்களில் ஒன்று (சுயநலம், உடற்பலம், பொதுநலம்)*

*5. ஒருசில ஸஹாபாக்கள் மரண வேளையிலும் தண்ணீர் அருந்தாமல் மரணித்ததற்கான காரணம் (தாகமின்மை, தண்ணீர் கிடைக்காமை, பிறர் தாகம் தீர்க்க முற்பட்டமை)*

**செயற்பாடு**

*பிறர் தேவைக்கு முன்னுரிமை வழங்குதல் என்ற தலைப்பில் குறுநாடகம் ஒன்றைத் தயாரித்து நடித்துக் காட்டுக.*